# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,
மதுரை - 625016, தமிழ்நாடு, இந்தியா

அஞ்சிறைத் தும்பி இலக்கிய வட்டம், விருதுநகர்
மருதம் கலை இலக்கிய ஆய்வு மையம், கும்பகோணம்

# தமிழ், தமிழர் - படைப்பும் ஆளுமையும்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

## தொகுதி - 2

வெளியீடு
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

அஞ்சிறைத் தும்பி இலக்கிய வட்டம், விருதுநகர்
மருதம் கலை இலக்கிய ஆய்வு மையம், கும்பகோணம்

மற்றும்

முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

E-ISSN: 2584-1238

# தமிழ், தமிழர் - படைப்பும் ஆளுமையும்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

## தொகுதி – 2

பதிப்பு

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

கருத்தரங்கத் தலைவர்

**முனைவர். ஔவை ந. அருள்**
இயக்குநர் (பொ), உலகத் தமிழ்ச்சங்கம், மதுரை

பதிப்புக்குழு

**முனைவர்.சு.தங்கமாரி,**
முதன்மை ஆசிரியர்,
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,
மதுரை

**முனைவர் ஜ.ஜான்சிராணி,**
ஆய்வு வளமையர்,
உலகத் தமிழ்ச் சங்கம்,
மதுரை

**முனைவர் க.சோமசுந்தரி**
ஆய்வறிஞர்,
உலகத் தமிழ்ச் சங்கம்,
மதுரை

**முனைவர் செ.கணேசமூர்த்தி**
நிறுவனர்,
மருதம் கலை இலக்கிய ஆய்வு மையம்,
கும்பகோணம்

**முனைவர் சு.வினோத்**
செயலர், அஞ்சிறைத்தும்பி இலக்கிய வட்டம்,
விருதுநகர்

**MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal**

**E-ISSN: 2584-1238**

| எண் | கட்டுரைத் தலைப்பு & கட்டுரையாளர்கள் | பக்கம் |
|---|---|---|
| 15 | சமூகவியல் பார்வையில் சாதியம்<br>முனைவர் செ.மார்கண்டன் | 81 |
| 16 | பண்டைத் தமிழ்க்குடியும் மணிமுடியும்<br>முனைவர் கா.ஸ்ரீதர் | 86 |
| 17 | அறத்தைப் பேண மறந்த இளைஞர்கள்<br>முனைவர் ப.சக்திவேல் | 92 |
| 18 | எஸ்.ராமகிருஷ்ணனின் சிரிக்கும் வகுப்பறை புதினம் சுட்டும் கல்விச்சிந்தனை<br>முனைவர் ப.கீதா | 98 |
| 19 | மானிடவியல் நோக்கில் பொருநர் வாழ்வியல்<br>முனைவர் கி மலர்விழி | 103 |
| 20 | பண்டையக் காலத் தமிழ்ச் சமுகத்தில் பண்பாட்டு நோக்கில் பட்டங்கள்<br>முனைவர் க.செந்தில்குமார், | 108 |
| 21 | இயற்கை வேளாண்மை போராளி, தமிழ் மண்ணின் அடையாளம்: கோ. நம்மாழ்வார்<br>முனைவர் பி.பாரதி<br>முனைவர் ப.விஜி | 113 |
| 22 | பழந்தமிழரின் மரபுகள்<br>முனைவர் ரா. ராஜேஸ்வரி | 119 |
| 23 | வள்ளலாரும் பெண்மையும்<br>முனைவர் சீதாலட்சுமி | 125 |
| 24 | ‘தமிழ்மாமணி’ க.வெள்ளைவாரணனார்<br>முனைவர் தி.மல்லிகா | 139 |
| 25 | ஆற்றுப்படையும் பாணர்களின் பண்பாடும்<br>டாக்டர் மு.சற்குணவதி | 143 |
| 26 | பெண்ணிய வாசிப்பில் மணிமேகலை<br>முனைவர் பெ.ஆனந்தி, | 150 |
| 27 | பண்டைய மகளிர் தொழில்கள்<br>முனைவர் ச.தனலெட்சுமி | 160 |
| 28 | பண்பாட்டு நிலவியல் நோக்கில் சங்கஇலக்கியம்<br>முனைவர் மா.பத்மபிரியா | 167 |
| 29 | தமிழ் எழுத்து வரலாற்றில் மக்கட் பெயரும் ஊர்ப் பெயரும்<br>முனைவர். அ. தலையாசி | 174 |

# 15. சமூகவியல் பார்வையில் சாதியம்

முனைவர் செ.மார்கண்டன்,
இணைப்பேராசிரியர்,
வேல்ஸ்பல்கலைக்கழகம்,
பல்லாவரம், சென்னை - 117, செல் : 9842324206.

DOI 10.5281/zenodo.15070044.

: Abstract

The term 'caste' as used today in the Sangam society did not exist at that time. But it cannot be denied that the elements of caste are visible in some places. Our grammar and literature show that the structure of caste in society has continuously developed in many stages. It is an absurd argument that the category 'caste' did not exist in Tamil society in the beginning. It can be seen through research that it emerged as a professional surname, turned into a clan name over time and later became a caste name by birth. In that sense, the purpose of this article is to discuss the records on castes.

Key Words : Caste - Sangam Society - Literature

## முன்னுரை

சங்க கால சமூகத்தில் இன்றைய பொருளில் பயன்படுத்தும் 'சாதி' என்ற பொருண்மை அன்று இல்லைஆனால் சாதிக்கான கூறுகள் சில இடங்களில் . சமூகத்தில் சாதி என்ற .தென்படுவதையும் மறுப்பதற்கில்லைகட்டமைப்பு தொடர்ந்து பல படிநிலைகளில்வளர்ந்து வந்துள்ளதை நம் இலக்கண, இலக்கியங்கள் காட்டுகின்றன .'சாதி' என்ற பிரிவே தமிழ்ச் சமூகத்தில் ஆதியில் இல்லை என்பது அபத்தமான வாதமாகும் . தொழில்வழிக் குடிப்பெயராகத் தோன்றிக் கால ஓட்டத்தில் குலப்பெயராக மாறிப் பின்னாளில்பிறப்பு வழிச் சாதிப் பெயராக மாறி வந்திருப்பதை ஆய்வுகளின் மூலம் அறியலாம்அந்த வகையில் சாதிகள் குறித்த பதிவுகளை விவாதிப்பதே இக்கட்டுரையின் . .நோக்கமாகும்

## சாதி என்னும் சொல்லாட்சி

சாதி என்னும் சொல்லாட்சி தமிழ்ச்சொல் அல்ல என்ற வாதம் நிலவுகிறது .'ஜாதி' என்ற வடசொல்லே தமிழில் 'சாதிஎன்ற சொல் வருவதற்கு காரணம் என்ற வாதமும் - ஆனாலும் .தமிழ்ச் சூழலில் நிலவுகிறது, சாதி என்ற சொல் தொல்காப்பியத்தில் இரண்டு இடங்களிலும், சங்க இலக்கியங்களில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையில் ஓர் இடத்திலும் வருவதை நோக்கலாம்.

'ஜாதி' என்று இன்று நாம் வழங்கும் பொருளில் கையாளப் படவில்லைஇனம் ., பிரிவு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதைப் பின்வரும் கருத்துகள் வழி அறியலாம்.

**"நீர்வாழ் சாதியுள் அறு பிறப்பு உரிய"** (தொல் மரபு .பொருள் .1542)

**"நீர் வாழ் சாதியுள் நந்தும் நாகே"**(தொல்- மரபு-பொருள்-1563)

தொல்காப்பியப் பொருளதிகார மரபியல் என்னும் சாதி குறித்தான சொல்லாட்சியைத்தொல்காப்பியப் பொருளதிகார மரபியல் சூத்திரங்கள் காட்சிப்படுத்துகின்றன.




http://Creativecommons.org//license/by/4.0/.

சாதி என்ற சொல் தமிழ்ச்சொல் அல்ல என்ற வாதம் ஒருபுறம் இருக்க, ஆனால்தமிழண்ணல், 'சாதி' என்பதுதமிழ்ச்சொல்லே என்ற விளக்கத்தை முன்வைப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழண்ணல் எழுதிய தொல்காப்பிய உரை பின்வருமாறு, "நீரில் வாழும் சாதியாகிய சுறா, முதலை, இடங்கர், கராம், அரால், வாளை எனும் ஆறும் போத்து எனும் பெயர் பெறும்இனம் எனும் பொருளுடைய தமிழ்ச்சொல் .வகைமை - சாதி - சாதிஎன்பதுதமிழ்ச் சொல்லேவக .இது பிறப்பு பற்றியதன்று .ைமை பற்றியது - தமிழண்ணல்); தொல்காப்பியம்; 2017; 531) இக்கூற்று மிகவும் கவனிக்கத்தக்க ஒன்றாகும்சாதி என்ற சொல் தமிழ்ச் சொல்லே என்ற தமிழண்ண.லின்கருத்து தமிழ்ச் சமூகத்தில் சாதி என்ற பிரிவினை இருந்ததற்கான தரவினை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

**"கடுப்புடைப் பறவைச் சாதி யன்ன"** (பெரும்பாணாற்றுப்படை : 229)

இக்கூற்றை வலியுறுத்தும் வகையில் வள்ளலாரும் திருவருட்பா பாடலொன்றில் **'பறவைச் சாதி'**என்று குறிப்பிடுவதும் தமிழ்ச்சமூகத்தில் சாதி என்ற சொல்லாட்சி புழக்கத்தில் இருந்து வந்துள்ளதை விளக்குவதாகும்.

**நான்கு வருணங்கள்**

வடமொழியின் தாக்கமே வருண பாகுபாட்டு முறையாகும்இந்த நால்வருண முறையையே தொல்காப்பியம் பின்பற்றி இருக்கலாம்அதைப் போன்று தமிழ்ச் சமூகமும் .நான்கு வகை நிலப்பகுப்பு முறையிலான திணை பகுப்பு முறையும் ஆராயத்தக்கதாகும் நான்கு வருணங்கள்என்ற பிரிவு வேதத்தில் தொடங்கப் பெற்று, மனுதர்மசாத்திரம் அதனை வழிமொழிந்து, பகவத்கீதையும் அக்கருத்தை அடியொற்றி நகர்வதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

**"பிராமணர்கள் தலையிற் பிறந்தவர்கள்**
**சத்திரியர்கள் தோளிற் பிறந்தவர்கள்**
**வைசியர்கள் தொடையிற் பிறந்தவர்கள்**
**சூத்திரர்கள் பாதத்திற் பிறந்தவர்கள்" (ரிக்வேதம் : 10/90/12)**

என்னும் கருத்தை வேதமும்,மனுதருமமும் சொல்வது பொருத்தமற்றதாகும் .எனவே, சாதியைக் கண்டிப்பதைவிடச் சாதிகள் தோன்றிய இந்த வகைமையைத் தான் முதலில் எதிர்க்கப்பட வேண்டியதாகும்.

**"தொழில் ஒழுக்கம் பற்றிச் சாதிகள் ஏற்படுத்தப்பெற்றன. தத்துவ ஒழுக்கம் பற்றிச் சமயங்கள் ஏற்படுத்தப் பெற்றன என்றுவள்ளற்பெருமான் இராமலிங்க அடிகளும் கூறுகிறார்"**ஊரன் அடிகள்) , சாதியும் மதமும்;2003;40)சமூகத்தில் பலவகையான தொழில் பிரிவுகள் இருந்தாலும் தொல்காப்பிய கருத்தில் உருவான அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவில் அடங்கும் கல்வி, காவல், வணிகம், வேளாண்மை என்னும் தொழில் ரீதியான பெரும் பிரிவுகளே சாதிகளுக்கான அத்தியாயங்களாக கொள்ள நேர்கிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**கீழோர் மேலோர்**

மனித சமுகம் ஏற்றத் தாழ்வுகளை போற்றி கடைபிடிக்கும் தன்மை கொண்டது . தொழில் பிரிவுகளின் அடிப்படையில் கீழானவர்களாக மாற்றுவது இச்சமூகத்தின் கட்டமைப்புபிராமணர் ., சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று வடமொழி நூல்கள் கூறுவதையே தமிழ் நுல்கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனக் குறிப்பிடுகின்றன.

**"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்**

**கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே"**(தொல்; கற்பியல்:2017; 1090)

என்னும் தொல்காப்பியப் பொருளதிகாரக் கற்பியல் சூத்திரத்தில் மேலோர் என்பது அந்தணர், அரசர், வணிகர் என்னும் மேல் மூன்று வருணத்தாரைக் குறிக்கும்கீழோர் என்பது . இக்கருத்தை அடியொற்றிய புறநானூற்று சங்கப் .நான்காவதாகிய வேளாளரைக் குறிக்கும் .பாடல் ஒன்றை ஆராயலாம்

**"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்**

**கீழ்ப்பா லொருவன் கற்பின்**

**மேற்பா லொருவனு மவன்கட் படுமே)** "183)

(ஔவை சுதுரைசாமிப்பிள்ளை., புறநானூறு ; 2009; 610)

என்னும் புறநானூற்றுவரிகளில் 'நாற்பால்' என்பது நான்கு சாதியைக் குறிப்பதாகும்மேலும் . சாதி பிரிவு இருந்ததற்கான தரவாக'கீழ்ப்பால்' ' மேற்பால்' என்ற சொல்லாட்சி சாதியப் பிரிவு, சங்க காலத்தில் இருந்துள்ளதைத் தெளிவுப்படுத்தும் சான்றுகளாக அமைகிறதுபுறநானுற்றில் மாங்குடி கிழார் பாடிய பாடல் கூறும் சாதியப்பிரிவுகுறித்து.,

**"துடியன், பாணன், பறையன்,கடம்பன் என்று**

**இந்நான்கு அல்லது குடியும் இல்லை- புறம் )** "335)

என்றஇப்பாடலுக்கு ஔவை துரைசாமிப் பிள்ளை தரும் விளக்கம் நோக்கத் தக்கதாகும் . நான்கு குடிகள் தவிர வேறு இல்லையா? இப்புலவர் பாடியபாடலின்விளக்கம் அவ்வூரைமட்டும்குறிப்பதாக ஔவை விளக்கம் தருகிறார்இவ்விளக்கம் ஏற்புடையதாக . இருந்தாலும், இக்குடிகள் தலையாய குடிகளாகும், இத்தகைய சாதிய பிரிவுகள் (குடி) எனவே .இருந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை, சங்க காலத்தில் சாதிய பிரிவுகள் இருந்துள்ளது என்பது திண்ணமாகும்மேலும் ..இப்பாடலில் மற்றுமொரு கருத்தும் நோக்கத்தக்கதாகும்."**வீரர்களின் நடுகல் தவிர வேறு கடவுள் இல்லை**என்ற கருத்தின் " வழி அன்றைய காலங்களில் பற்பல கடவுள்கள் இல்லை என்பதை தெளிவுப்படுத்துகிறது . பிற்கால ஆன்மிகவாதிகளால் பல கடவுள்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

**நானிலப் பிரிவு**

பழங்காலத்தில் தமிழகத்தின் நிலப்பரப்பு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்காகப் பிரிக்கப்பட்டிருந்ததை அனைவரும் அறிவோம்இந்நானில நால்வகை . நிலப்பிரிவு இயற்கையை ஒட்டிய இயல்பான பிரிவாக இருந்தாலும், நான்கு இனக்குழுக்களுக்கான தனித்த அடையாளப் பிரிவு என்பதை மறுப்புதற்கில்லைஇத்தகைய . பிரிவுகளே குடி வகைமைகளுக்கான சாதியி பிரிவுகளாக இருந்திருக்கலாம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

"பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்ற நான்கு வருணங்கள் அல்லது அதையே அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்று தமிழிற்கூறும் நான்கு சாதிகள் பொதுவாக இந்திய நாடு முழுவதிலும் பரவியிருந்தவை, இப்போதும் உள்ளவைஇவை . தவிர வேறு பல சாதிகளும் பழந்தமிழ் நூல்களில்அதாவது (சாதிப் பெயர்களும்) அவை .தொல்காப்பியம் சங்க இலக்கியங்கள் முதலியவற்றிற் காணப்பெறுகின்றன அந்நாளில் தமிழகத்தில் நிலவிய நிலப்பிரிவுகள் தொழிற்பிரிவுகள் அடிப்படையில் ".அமைந்தவை(ஊரன் அடிகள்; சாதியும் மதமும்;2003;16) இத்தகைய பிரிவுகள், நிலம் சார்ந்தும், திணை ஒழுக்கம் சார்ந்த சாதிய பிரிவுகளாக அல்லது குடி வகைமைகளாக இருந்திருக்க அதிக வாய்ப்பு உள்ளதை புரிந்துகொள்ளலாம்.

'சிலப்பதிகார ஊர்காண் காதையில்') 212) "குலம் நான்காகப்படுத்த வகையால் தெரிந்த அந்தணர் அரசர் வணிகர் வேளாளரெனச் சொல்லப்பட்டார் இருக்கும் நான்காய் வேறுபட்ட தெருக்களும்" என்று அடியார்க்கு நல்லார் உரை விளக்கம் தருகிறார். இத்தகைய கூற்றுகள் நான்கு வருணத்தாரும் தனித்தனியாக நான்கு வெவ்வேறு .தெருக்களில் வாழ்ந்துள்ளனர் என்பதைப் புலப்படுத்துகிறது

தொல்காப்பிய பொருளதிகாரத்தில் சில இடங்களில் சாதியைப் பற்றிய செய்திகள் உள்ளன . குறிப்பாக மரபியலில்71முதல் 85வரை 15சூத்திரங்கள் சாதியப் பிரிவுகளைக் குறிப்பதாகவே உள்ளன.

**போர்த் தொழிலும் குடி வேறுபாடும் -**

ஆநிரைகளைக் கவரும் நோக்கோடு போர் மரபு தொடங்கி இருக்கிறது . பிற்காலங்களில் நிலம் கவர்தலைநோக்கமாக கொண்டு மாறிவந்துள்ளதுஇத்தகைய .போர்கள் குடிகளுக்கு இடையே நடந்த போர் மரபு என்பதை மறுப்பதற்கில்லை

"குலங்களிடையே நடந்து வந்த முந்தைய யுத்தங்கள் கால்நடைகளையும் அடிமைகளையும் செல்வங்களையும் கைப்பற்றும் நோக்கத்தில் நிலத்திலும் நீரிலும் திட்டமிட்ட படையெடுப்புகளாக இருந்து ஒரு முறையான தொழிலாக மாறிவிட்டன .பெ) ". மாதையன்; சங்க இலக்கயத்தில் வேளாண் சமுதாயம்; 2010: 49) இத்தகைய போர் மரபு என்பது குடிகளுக்கு இடையே நடந்தவையாகும்இதுவே பிற்கால சாதிய பிரிவுகள் தோன்ற .காரணமாகவும் இருக்திருக்கலாம்

**சங்க காலஉடன்போ -க்கு**

சங்க இலக்கியங்களில் உடன்போக்கு, நிகழ்ந்துள்ளதை அறிய முடிகிறது. உடன்போக்கு நிகழ காரணம் என்ன? என்ற விவாதத்தை முன் வைத்து, சங்ககால சமூகத்தை ஆராயலாம்மருதநிலத் தலைவி ., மருதநில தலைவனுடன் மட்டுமே உடன்போக்குச் சென்றாள் என்ற எந்த அடிப்படைத் தரவுகளும் இல்லைந ான்கு நிலத்தலைவியும் அந்தந்த நிலத்தலைவனுடன் மட்டுமே உடன்போக்குச் சென்றனர் என்ற கருத்து சங்க இலக்கியங்களில் எங்கும் பதிவாகவில்லை.

அகமண முறையைக் கடைப்பிடித்து வந்த சங்ககால சமூகத்தில் அகமண முறை ஒழுக்கம் உடைக்கப்பட்டு உடன்போக்கு என்ற புதிய நிலை தோன்றி இருப்பதை அறியலாம்இந்த உடன்போக்கு முறை என்பது ஒரு குடியில் இருந்து மாற்று குடிக்கு


http://Creativecommons.org//license/by/4.0/.

இங்கே மாற்று குடிகள் என்பது .பெண் சென்று வரைவை முடிப்பதையே காட்டுகிறது மாற்றுச் சமூகமாக அல்லது மாற்று சாதிகள் என்ற பிரிவை அடையாளப்படுத்துவதாக இந்த வகையில் .இருக்கிறது குறுந்தொகை பாடல் ஒன்றை ஆராயலாம் .

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறுகலிங்கம்கழாஅதுஉடீஇக்**
**குவளைஇயுண்கண்குய்ப்புகைகமழத்**
**தாந்துழந்துஅட்டதீம்புளிப்பாகர்**
**இனிதெனக்கணவன்உண்டலின்**
**நுண்ணிதின்மகிழ்ந்தன்றுஒண்ணுதல்முகனே"** (குறுந்தொகை : 167)

இப்பாடல் தரும் விளக்கம்தலைவி உடன்போக்குச் சென்று வேறு குடியைச் சார்ந்த . உயர்குடியில் தோன்றிய தலைவி .தலைவனிடம் தனிக்குடித்தனம் நடத்த தொடங்குகிறாள் எவ்வாறு தலைவனுக்கு .நடத்துகிறாள் (வாழ்க்கை) எவ்வாறு தன் தலைவனுடன் குடும்பம் சமைத்து தருகிறாள் என்பதை மறைந்து நின்று பார்க்கும் செவிலித்தாயின் செயல்பாடு சாதிப் பிரிவினை மையப்படுத்தியதாக இருக்கலாம். பிரிந்து சென்ற தலைவியை நேரில் சென்று நலம் விசாரிக்காமல், மறைந்து நின்று பார்க்க வேண்டிய அவசியம் என்ன? உயர்குடியில் தோன்றியதாகச் சொல்லப்படும் தலைவி, எதிர்நிலையில் உள்ள கீழ்க்குடியில் தோன்றிய தலைவனுடன் உடன்போக்கு சென்று விட்டதால், நேரில் சென்று பார்க்க தயங்கி மறைந்து நின்று பார்த்திருக்கலாம் செவிலித்தாய். எனவே, பழங்கால சமூகவியல் என்பதும் சாதியப் படிநிலை அடங்கிய சமூகமாகவே இருந்துள்ளதை வெளிப்படுத்துகிறது.

**முடிவுரை**

கல்வி, காவல், வணிகம், வேளாண்மை என்னும் பல பிரிவுகளில் சாதி இயங்கி இருப்பதை மறுப்பதற்கில்லைதொழில்களை மையமிட்டு மக்களை நான்கு வகையாக . தொடக்கத்தில் தொழிலால் .பிரித்துள்ள பிரிவுகள் சாதிய அடிப்படையிலானதாகும் ஏற்படுத்தப்பட்ட பிரிவு, பிறப்போடு தொடர்புப்படுத்தப்பட்டு காலப்போக்கில் பிறப்பால் சாதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனஎனவே ., சங்க கால சமூகம் என்பதும் சாதிய படிநிலைகளைக் கொண்டே இயங்கி வந்திருக்கின்றன என்பதை இக்கட்டுரையின் வழி அறிந்துகொள்ள முடிகிறது.

**பார்வை நூல்கள்**

1. தமிழண்ணல் தொல்காப்பியம் -, மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம் 48, தானப்ப முதலி தெரு, மதுரை -625 001, பதிப்பு - 2017.
2. ஔவை துரைசாமிப்பிள்ளை, புறநானூறு(முதல் பாகம்), பூம்புகார் பதிப்பகம், பிரகாசம் சாலை, சென்னை-600108, பதிப்பு -2009.
3. ஊரன் அடிகள், சாதியும் மதமும்,சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர்-607303 (கடலூர் மாவட்டம் - பதிப்பு (2003.
4. பெ.மாதையன்,சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பதிப்பு -2010.


http://Creativecommons.org//license/by/4.0/.